# 'குற்றவாளிக் கூண்டில் கவிஞர் கண்ணதாசன்'



தொகுப்பு
பத்மா இளங்கோவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'குற்றவாளிக் கூண்டில் கவிஞர் கண்ணதாசன்'

தொகுப்பு
பத்மா இளங்கோவன்

C D C EUROPE ORIENT
B P 229
31000 TOULOUSE
FRANCE.

Tél. : 05 61 55 00 13 Fax : 05 61 55 00 13
06 64 66 39 28

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'குற்றவாளிக் கூண்டில் கவிஞர் கண்ணதாசன்'

முதற்பதிப்பு : கார்த்திகை 2001

[C] பதிப்புரிமை : வி. ரி. இளங்கோவன்

வெளியீடு : ஐரோப்பிய கீழைத்தேச தொடர்பு மையம்
துலூஸ், பிரான்ஸ்.

" KUTTAVALIK KUNDIL
KAVIGNAR KANNATHASAN "

Première édition : Novembre 2001

C D C EUROPE ORIENT
B P 229
31000 TOULOUSE
FRANCE

Tél. : 05 61 55 00 13     Fax : 05 61 55 00 13
06 64 66 39 28

# பதிப்புரை

என் சிறு வயதிலேயே கண்ணதாசனின் 'தென்றல்' பத்திரிகையைப் படித்திருக்கிறேன்.

அன்றொரு நாள் அதன் முதற்பக்கம் முழுவதும் என் மூத்த சகோதரர் நாவேந்தன் எழுதிய 'இலங்கையில் நடப்பதென்ன' என்ற தலைப்பிலான கட்டுரை பிரசுரமாகியிருந்ததைப் பார்த்திருக்கிறேன். வழமையாகக் கண்ணதாசன் எழுதும் கட்டுரையே முதற்பக்கத்தில் இடம்பெறுவதுண்டு.

அக்காலம் தொடக்கம் கண்ணதாசன் படைப்புகள் எங்கு கிடைப்பினும் தேடிப் படிப்பதுண்டு.
என் குடும்பத்தினர், சகோதரர்கள் அக்காலத்தில் அரசியல் - இலக்கியத் துறைகளில் ஈடுபட்டிருந்தமையால் இலக்கிய நூல்கள், சஞ்சிகைகள் நிறையவே, சிறுவயதிலேயே வாசிக்கக் கிடைத்தன.

என் கல்லூரி நாட்களில் வெளியான கவிஞர் கண்ணதாசனின் கவிதைகள் முதலிரண்டு தொகுதியிலிருந்து அவரது ஆறாவது தொகுதி வரை படித்திருக்கிறேன்.
சினிமாப் பாடல்களும் கேட்டிருக்கிறேன்.
அவரது அழகு தமிழ் வசனம் அற்புதமானதுதான்.
கொஞ்சு தமிழ்க் கவிதைகள் சிலவும், மீண்டும் மீண்டும் கேட்கத் தூண்டும் சில சினிமாப் பாடல் வரிகளும் இன்றும் எனக்கு ஞாபகம்தான்!

ஆனால், அவரை ஒரு மக்கள் இலக்கியப் படைப்பாளியாகப் பார்க்க முடியாதிருக்கிறது.
அந்தக் குழப்பம் நிறைந்த படைப்பாளியால் ஏழை எளியோர்க்கு எத்தகைய பயனையும் கொடுத்திட முடியவில்லை என விமர்சகர்கள் கூறுகிறார்கள்.
தன்னையும் குழப்பி, மக்களையும் குழப்பவே அவரால் முடிந்தது என மக்கள் இலக்கியப் படைப்பாளிகள் கூறுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணதாசன் கவிதைகள் முதலிரண்டு தொகுதிகளும் சேர்த்து 1968-ல் வெளியிடப்பட்டபோது அத்தொகுப்பில் கண்ணதாசன் எழுதியுள்ளதைப் பாருங்கள்:-

“தி. மு. கழகத்தில் இருந்தபோது நான் எழுதிய வெறித்தனமான கவிதைகள் அனைத்தும் இதில் அடக்கம்.
கவிஞன் ஒருவன் அரசியல்வாதியாகவும் இருந்தால் கவிதைக் கருத்துக்கள் எவ்வளவு முரண்படும் என்பதற்கு இந்தத் தொகுப்புகளே சான்று.
யார் யாரைப் போற்றியிருக்கிறேனோ, அவர்களைக் கேலி செய்தும் இருக்கிறேன்.
யார் யாரைக் கேலி செய்திருக்கிறேனோ, அவர்களைப் போற்றியும் இருக்கிறேன்.

........ ......... ............ .................. ................. ......................

போற்றுதல் எந்தப் பக்கம் - தூற்றுதல் எந்தப் பக்கம் இருக்கும் என்பதை நீங்கள் கண்டு கொள்ளலாம்.

.......................... ..................... ................................ ...............

‘இந்த நேரத்தில், இப்படி முரண்பட்ட தொகுதிகளை வெளியிட வேண்டிய அவசியமென்ன?’ என்று நீங்கள் கேட்பீர்கள்.

கருத்து எதுவாயினும் கவிதை என்னுடையது.
எனக்குப் பிறகு என்னைப்பற்றி விமர்சனம் செய்வோர்க்கு என் எழுத்துக்கள் எல்லாம் கிடைக்க வேண்டும்.
கழகத்திலிருந்தபோது நான் நடத்திய அரசியல் சரியானதா?
இதற்குப் பதில் சொல்ல வேண்டியது காலமே தவிர நான் அல்ல.
எந்த நேரத்திலும் மிகைப்பட்ட உணர்ச்சியோடு நான் வாழ்ந்திருக்கிறேன்.
எதிர்கால விமர்சகர்களுக்கு இது நல்ல தீனியாக இருக்குமென்பதில் ஐயமில்லை.

............ .......................... .................................... ..................

கருத்து உங்களைக் குழப்பும், கவிதை உங்களை மயக்கும்.

........................... ........................... ............................ ................

எத்தனை கவிதைகள் காலங்கடந்து வாழப் போகின்றன என்பது எனக்குத் தெரியாது.

ஒவ்வொரு கட்சிக்காரருக்கும் நான் கத்தியும் கொடுத்திருக்கிறேன், கேடயமும் கொடுத்திருக்கிறேன்.
என்னை மையமாக வைத்தே எல்லோரும் சண்டை போட்டுக் கொள்ளலாம்.

எந்தத் தலைவரையும் பழிப்பதிலும் புகழ்வதிலும், என் தமிழ் எப்படி விளையாடி இருக்கிறதென்பதை இப்போது படியுங்கள்.
விமர்சனங்களை அடுத்த தலைமுறைக்கு விட்டுவிடுங்கள்.”

இத்தகைய வாக்குமூலங்கள் மூலம் கண்ணதாசனை ஓரளவு புரிந்து கொள்ளலாம்.

கவிஞர் அப்துல் ரகுமான் சொல்வதைக் கேளுங்கள்:-

.......................... ..................... ................................ ...............

“பாரதி - பாரதிதாசன் தவிர்த்து வாழும் கவிஞர்களில் யாருடைய கவிதையை நம் சினிமாக்காரர்கள் பயன்படுத்தி இருக்கிறார்கள்?

சிற்பி சிருட்டிப்பது கலை.
அம்மி கொத்துவது தொழில்.
திரைப்படப் பாடல் திரும்பத் திரும்ப டூயட், டான்ஸ் என்ற குறுகிய எல்லைக்குள் அடங்கி விடுகிறது.
ஒரே சூழலுக்குத் திரும்பத் திரும்ப பாட்டு எழுதச் சொன்னால் பாவம் கவிஞன்தான் என்ன பண்ணுவான்?
அம்மி கொத்தத் தொடங்கி விடுகிறான்.
மேலும், சினிமாப் பாட்டு எல்லோருக்கும் புரிய வேண்டும், அதனால் வார்த்தைகள் சாதாரணமாக கொச்சையாக இருக்க வேண்டுமென பாடலாசிரியன் நிர்ப்பந்திக்கப்படுகிறான்.

கண்ணதாசன் சில நல்ல பாடல்களைத்தான் எழுதியிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை பத்து சதவிகிதம் இருக்குமா என்பதே சந்தேகம். மீதி தொண்ணூறு சதவிகிதமும் சினிமாத் தேவைக்கான உற்பத்திதான்.

ஒருமுறை கண்ணதாசனிடம் நான் –

'மீன் விற்கும் சந்தையில் விண்மீன்களை விற்பவன் நீ'' – என்று கூறினேன்.
இறுதிக் காலத்தில் இது உண்மையென்று கவிஞர் கண்ணதாசன் என்னிடம் கூறிக் கண் கலங்கியிருக்கிறார்.

நான், மு. மேத்தா, நா. காமராசன் எல்லோரும் இருந்த மேடையில்தான் கங்கை அமரன், –
"நீங்கள்ளாம் ரொம்ப சிந்திக்கிறீங்க...
சினிமாவுக்கு அது தேவையில்லை" என்று சொன்னார்.
முதலில் நான் சொன்னபோது வருத்தப்பட்ட வைரமுத்து கூட அனுபவப்பட்ட பிறகு இப்போது,
"சினிமா பாட்டு எழுதக் கவிஞர்கள் தேவையில்லை" என்று கூறியிருக்கிறார்."

கவிஞர் அப்துல் ரகுமானின் கூற்று கவனத்திற்குரியது!

நவீன உலகின் முன்னணி ஊடகமான சினிமாத் துறையில் ஈடுபட்டவர்கள், நீண்ட காலம் அத்துறையில் செயற்பட்டவர்கள் பிரபல்யமாகி நிறைந்த அறிமுகத்தைத் தேடிக்கொள்கிறார்கள்.
அதுவும் தமிழ் இனம் சினிமாச் சகதிக்குள் வீழ்ந்து கிடப்பதால், சினிமா சம்பந்தப்பட்டவர்கள், தமிழர்களது வயிற்கரை முதல் வீடு வரையும், வேலைத்தலம் முதல் வாகனங்கள் தோறும் உலகெங்கும் பேசப்படுகிறார்கள்.

உலகில் முன்னேறிவரும் எந்த இனத்தையும் விட சினிமாவே மூச்சு, பேச்சு, அரசியல், அறிவு, பொழுதுபோக்கு எல்லாமே என்று ஒரு பக்கம் சீரழிகிறது தமிழினம்.

இதற்கு உந்து சக்தியாகவிருந்து பணப்பெட்டிகளை நிரப்பிக் கொள்கிறார்கள் காலமறிந்து செயற்படும் பணமுதலைகள். இவர்கள் சர்வதேச ரீதியாக வலைபரப்பி தமிழினத்தைச் சீழ் பிடித்த சினிமாவுக்குள்ளேயே மூழ்கடித்து வருகிறார்கள்.

இந்த நிலையிலிருந்து தமிழினத்தை விழிப்படைய வைக்க வேண்டியது ஒவ்வொரு மக்கள் படைப்பாளியினதும் கடமையாகும்.
சினிமா சம்பந்தமான சரியான பார்வை எம்மக்களுக்குப் புகட்டப்பட வேண்டும்.
அந்த ஊடகத்தின் பயன்பாடு மக்களுக்கானதாக இருத்தல் வேண்டும் என்பதை, மக்கள் புரிந்துகொண்டு செயற்பட்டால் தமிழினம் உலகளாவிய பார்வையில் சிந்தித்து முன்னேற முடியும்.

1980 –ம் ஆண்டு யாழ். கிக்ஸ் வெளிவாரிப் பட்டப்படிப்பு நிலைய இயக்குநர், நண்பர் நெல்லை நடேஸ் (இன்று சிறந்த செய்தியாளராக விளங்கும் நடேசன்) அங்கு நடைபெறும் வாணிவிழாவில் இடம்பெறும் கவியரங்கில் கலந்துகொள்ளுமாறு அழைத்திருந்தார்.
அவ்விழாவில், பல்வேறு கல்லூரிகள் மற்றும் கல்வி நிலையங்களைச் சேர்ந்த மாணவர்களும், இளந்தலைமுறையினரும் பெருமளவில் கூடியிருந்தனர்.

கவியரங்கையடுத்து வழக்காடு மன்றமும் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டிருந்தது.
வழக்காடு மன்றத்தில் கலந்துகொள்ள வேண்டிய நண்பர் ஒருவர் சமூகமளிக்காததால், கவியரங்கு முடிந்ததும் வழக்காடு மன்றத்திலும் கலந்து கொள்ளுமாறு நண்பர் நடேஸ் கேட்டிருந்தார்.
அதற்கிணங்க வழக்காடு மன்றத்திலும் கலந்து கொண்டேன்.
அன்று இலக்கிய நிகழ்வைக் காண என்னோடு வந்திருந்த பத்மராணி மகேசு (பத்மா இளங்கோவன்), 'நிகழ்ச்சி மிகவும் நன்றாக இருந்தது, இதனைத் தொகுத்து ஒரு பத்திரிகைக்கு அனுப்பி வைப்போமா' எனக்கேட்டார்.
'அப்படியே செய்யவும்' என்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்படி, இந்நிகழ்ச்சித் தொகுப்பு அன்று இலக்கிய நிகழ்வுகளுக்கு முன்னுரிமை அளித்துவந்த "தினபதி" பத்திரிகைக்கு அவரால் அனுப்பப்பட்டது தமிழ்ப் பத்திரிகைத்துறை ஜாம்பவான் என்று மதிக்கப்படும் 'தினபதி' ஆசிரியர் திரு எஸ். டி. சிவநாயகம் அதனை அழகுறப் பிரசுரித்தார்.
இந்த நிகழ்ச்சித் தொகுப்பு பின்னர் தமிழகத்திலும் மறுபிரசுரம் செய்யப்பட்டதாக அடுத்த வருடம் தோழர் கே. டானியலும் யானும் தமிழகம் சென்றிருந்தபோது நண்பர்கள் அங்கு கூறினர்.
கவிஞர் கண்ணதாசன் கவனத்திற்கும் இது கொண்டுசெல்லபட்டதாகச் சொன்னார்கள்.

கவிஞர் கண்ணதாசன் படைப்புகள் குறித்து ஆய்வுகள் செய்து எத்தனையோ நூல்கள் வெளிவந்துள்ளன.
மேடைகள் தோறும் அவர் புகழ் பரப்பும் எத்தனையோ நிகழ்வுகள் இன்றுவரை நடைபெற்று வருகின்றன.

கண்ணதாசன் குறிப்பிட்டது போலவே விமர்சகர்களுக்கு அவர் நல்ல தீனியாகிறார்.
இந்நூலில் கவிஞர் கண்ணதாசனை ஒரு புதிய கோணத்தில் தரிசிக்கலாம்.

- வி. ரி. இளங்கோவன்.
19 - 10 - 2001

# முகவுரை

அன்று என் மனதுக்குப் பிடித்த, இந்த வழக்காடு மன்றத்தைத் தொகுத்து "தினபதி" பத்திரிகைக்கு, 'ராணி மகேசு' என்ற பெயரில் அனுப்பியிருந்தேன்.

ஏற்கனவே எனது கவிதை, பாலர் பாடல், கட்டுரை சிலவற்றைப் பிரசுரித்து எனக்கு ஊக்கம் அளித்த பத்திரிகைகளில் ஒன்றான "தினபதி" மகிழ்ச்சி அளிக்கத்தக்க வகையில் (24 - 10 - 1980) இதனைப் பிரசுரித்திருந்தது.


இந்த வழக்காடு மன்றத்தில் கலந்துகொண்டவர்கள் அக்காலத்தில் பட்டிமன்ற, வழக்காடு மன்ற இளந்தலைமுறை முன்னணிப் பேச்சாளர்களாக இருந்தாலும், இந்நிகழ்வுக்குப் பின், பத்திரிகைத் துறையினரின் பாராட்டிற்குப் பின் அவர்கள் நட்சத்திரப் பேச்சாளர்களாக மதிக்கப்பட்டார்கள்.

கவிஞர் கண்ணதாசனைப் பலவிதமாக அலசிப் பார்த்துள்ளது இந்த வழக்காடு மன்றம்.

இலக்கிய இரசிகர்களுக்கு பெருவிருந்தாக அமையும் என்ற நோக்கில், பத்திரிகையில் பிரசுரமானதில் எவ்வித மாற்றம் - திருத்தமின்றி இவ்வழக்காடு மன்றம் சிறு நூலாக வெளிவருகிறது.

- பத்மா இளங்கோவன்.
19 - 10 - 2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



* காமரசம் சொட்டும் கவிதைகள்!
* தனி நபர் புகழ்பாடும் பாடல்கள்!
* தரங்கெட்ட சினிமாப் பாட்டுகள்!
* தலைவர்களை ஏற்றி இறக்கும் கவிதைகள்!
* மது வெறியில் மது, மாதுபற்றி பாடல்கள்!

குற்றவாளிக் கூண்டில் கவிஞர் கண்ணதாசன்

'நீதிபதி'யின் கடும் எச்சரிக்கையுடன் விடுதலை

- காமரசம் சொட்டும் கவிதைகள்!
- தனி நபர் புகழ்பாடும் பாடல்கள்!
- தரங்கெட்ட சினிமாப் பாட்டுகள்!
- தலைவர்களை ஏற்றி இறக்கும் கவிதைகள்!
- மதுவெறியில் மது, மாதுபற்றிப் பாடல்கள்!

## 'குற்றவாளிக் கூண்டில் கவிஞர் கண்ணதாசன்'

## 'நீதிபதி'யின் கடும் எச்சரிக்கையுடன் விடுதலை

' குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டார் ' தமிழக அரசவைக் கவிஞர் கண்ணதாசன்.
அவரை ' நீதிபதி ' கடும் எச்சரிக்கையுடன் விடுதலை செய்தார்.

காமரசம் சொட்டும் கவிதைகளையும் -

தனிநபர் புகழ்பாடும் வழிபாட்டுக் கவிதைகளையும் -

ஒப்பந்த அடிப்படையில் தரமற்ற சினிமாப் பாடல்களையும் -

அழகு, காதல், சோகம், இயற்கை, மது, மாது - இவை சம்பந்தமான பாடல்களையும் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தர்ப்பத்திற்கேற்பத் தலைவர்களை ஏற்றி இறக்கி எழுதும் பாடல்களையும் -

மதுவிலக்கு அமுலிலுள்ள தமிழகத்திலிருந்து கொண்டு மதுவெறியில் - அதன் பெருமை பற்றிய பாடல்களையும் இனிமேல் எழுதக்கூடாதென்ற கடுமையான எச்சரிக்கையுடன்தான் அவரை விடுதலை செய்தார் 'நீதிபதி '.

அரசவைக் கவிஞர் என்ற பெருமையைப் பெற்ற கண்ணதாசன் இனிமேலாவது உழைக்கும் மக்களின் பிரச்சினைகளை -

அந்தப் பிரச்சினைகளால் ஏற்படும் அவலங்களை -

பிரச்சினைகளுக்கும், அவலங்களுக்குமான அடிப்படைக் காரணங்களை -

அவற்றிற்கான தீர்வினைக் கூறும் பாடல்களையும், சமுதாய நோக்குள்ள பாடல்களையுமே எழுத முயற்சி செய்ய வேண்டும்.

இலங்கைத் தமிழர்களுக்காகக் குரல் கொடுத்தவர் என்பதைக் கருத்தில் கொண்டே அவரை விடுதலை செய்கின்றேன்.

இங்கு தெரிவிக்கப்பட்ட கருத்துகள், சான்றுகள் ஆகியவற்றைக் கொண்டே இத்தீர்ப்பினை அளிக்கின்றேன் என்றார் 'நீதிபதி '.

# வழக்காடு மன்றம்

குற்றவாளிக் கூண்டில் கண்ணதாசன் ' என்ற சுவைமிக்க வழக்காடு மன்றம், கடந்த சனி காலை யாழ். கிக்ஸ் வெளிவாரி பட்டப்படிப்பு நிலையத்தில் நடந்த வாணி விழா நிகழ்ச்சிகளில் ஒன்றாக இடம் பெற்றது.
நூற்றுக் கணக்கான மாணவர்களும், இளைஞர்களும், யுவதிகளும் இவ்வழக்கைப் பார்த்து ரசித்தனர்.

'கண்ணதாசன் குற்றவாளி 'யென, வழக்கைத் தாக்கல் செய்து திரு. அ. குமரன், திரு. வி. ரி. இளங்கோவன் ஆகியோர் வாதிட்டனர்.

'கண்ணதாசன் குற்றவாளியல்லர்' எனத் திரு. த. முத்துக்குமாரசாமி, திரு. கோவை நந்தன் ஆகியோர் வாதிட்டனர்.

திரு. ராஜன் 'நீதிபதி 'யாகக் கடமையாற்றினார்.

சுமார் இரண்டு மணி நேரமாக வழக்கு நடைபெற்றது.

கண்ணதாசன் மீது குற்றங்களைச் சுமத்தி திரு. அ. குமரன் வாதாடுகையில் குறிப்பிட்டதாவது:-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமுதாயத்தைப் பாழ்படுத்தும் கவிஞர்

'மக்களின் பிரச்சினைகளைச் சித்தரித்துக் காட்டும் ஒரு சமுதாயக் கவிஞனாகக் கண்ணதாசன் இல்லை. சமுதாயத்தைப் பாழ்படுத்தும் கவிஞராகவே அவர் இருக்கின்றார்.

முத்தையா என்ற இயற்பெயர் கொண்ட கண்ணதாசன் தமிழகத்தில் மாத்திரமன்றி இலங்கைத் தமிழ் மக்கள் மத்தியிலும் நச்சுப் படைப்புகள் மூலம் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளார். எனவே தான் அவரை இங்கு விசாரணைக்கு நிறுத்தியுள்ளோம்.

அவரது தனிப் பாடல்களோ, சினிமாப் பாடல்களோ மக்களுக்கு படிப்பினையூட்டுவனவாக இல்லை. தனிமனிதப் புலம்பல்களாகவும், மது - மாதுச் சுகங்களைக் கட்டி அழுவனவாகவுமே அவை உள்ளன. இன்று தமிழக அரசவைக் கவிஞராகவுள்ள அவர், ஏற்றி - இறக்கிப் பாடாத தலைவர்களேயில்லை எனலாம்.

காலத்துக்குக் காலம் தன்னை வளம்படுத்திக் கொள்வதற்காக - விளம்பரப்படுத்திக் கொள்வதற்காக- வாங்கித் தின்பதற்காக - குடிப்பதற்காக அவர் பாடிய பாடல்கள் அத்தனையும் சமுதாய மேம்பாட்டுக்கு உதவாதவை.

எதிர்த் தரப்பினர் குறிப்பிட்டபடி பார்த்தாலும் கூட இங்குள்ள தமிழ்த் தலைவர்கள் சந்தர்ப்பவாதிகளாக மாறுவதற்கு முன்னுதாரணமாக விளங்கிய கண்ணதாசன், நிச்சயம் குற்றவாளியே தான்.
எனவே அவரது பாடல்கள் ஏற்படுத்திய தாக்கங்களுக்காக, இனிமேல் இப்படிப்பட்ட கவிஞர்கள் உருவாகாமலிருப்பதற்கு ஒரு படிப்பினையாக அவர் தண்டிக்கப்பட வேண்டும்'.
இப்படி அவர் வாதாடினார்.

'கண்ணதாசன் குற்றவாளி அல்லர்' என்று வாதிட்ட திரு. முத்துக்குமாரசாமி தமது வாதத்தில் குறிப்பிட்டதாவது:-

## உணர்ச்சிக் கவிதைகள்

'கண்ணதாசன் எழுதிய சினிமாப் பாடல்கள், சினிமாப் படங்களை நெறிப்படுத்தியவர்கள் குறிப்பிட்ட காட்சிகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் எழுதப்பட்டவையாகும்.
அவர் ஒரு தொழிலாளி என்ற விதத்தில் சினிமா முதலாளி சார்பில் குறிப்பிடப்படும் காட்சிகளுக்காக அவர் பாடல்களை எழுதுகிறார்.
எனவே அதில் குற்றம் காணக்கூடாது.

கவிஞர் தாமே குறிப்பிட்டது போல, 'தங்கத்திலே ஒரு குறையிருந்தாலும் அது தரத்தினில் குறையாது.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் தமிழர்கள் 1958, 1961 ஆம் ஆண்டுகளில் கண்ட துன்பங்களை அறிந்து கவிஞர் கண்ணதாசன் மனங் கொதித்து உணர்ச்சிக் கவிதைகளை யாக்கியுள்ளார். இயக்கமும் நடத்தியுள்ளார்.

அவர் சில வேளைகளில் மதுவெறியில் இருந்தும் கூடப் பாடியிருக்கலாம். ஆனால் சட்டத்தின்படி அது மன்னிக்கப்படலாம்.

காலத்திற்குக் காலம் நாட்டில் ஏற்பட்ட மாற்றங்களுக்கேற்ப அவர் கட்சி மாறியது, பல தலைவர்களைப் பற்றிப் பாடியது எல்லாம் அவரது வளர்ச்சியையும், திறமையையுமே குறிக்கும்.

அசைக்க முடியாத ஆட்சிப் பலமுள்ள எம். ஜி.. ஆர்., தன்னைக் கீழ்த்தரமாகத் தீட்டித் தீர்த்த கண்ணதாசனை அரசவைக் கவிஞராக நியமித்தது - அப்பதவிக்குத் தகுதியுடையவர் அவர்தான் என்பதை உணர்ந்ததால்தான். எனவே, தமிழ் மக்கள் பெருமைப்படத்தக்க, புகழ்பெற்ற பல்லாயிரம் பாடல்களை ஆக்கிய கண்ணதாசன் குற்றவாளியல்லர். இப்படி அவர் வாதிட்டார்.

# திட்டும், புகழ்ச்சியும்

'கண்ணதாசன் குற்றவாளி ' என்று சான்றுகள் காட்டித் திரு. வி. ரி. இளங்கோவன் வாதிடுகையில் குறிப்பிட்டதாவது:-

'உழைக்கும் மக்களின் பிரச்சினைகளை, அவலங்களை, அவற்றின் அடிப்படைக் காரணங்களை - தீர்வினை சித்தரித்து அம்மக்களுக்கு உணர்வூட்டும் கவிதைகளைக் கணணதாசன் ஆக்கவில்லை.

பிற்போக்குத் தலைவர்களைப் பற்றியும், தனி நபர்களைப் பற்றியும், பாலுணர்வுச் சுகத்தைப் பற்றியுமே அவர் பாடியுள்ளார்.

அண்ணாவைத் திட்டினார் - புகழ்ந்தார்.
காமராசரைத் திட்டினார் - புகழ்ந்தார்.
நேருவைத் திட்டினார் - புகழ்ந்தார்.
இந்திராவைத் திட்டினார் - புகழ்ந்தார்.
கருணாநிதியைத் திட்டினார் - புகழ்ந்தார்.
எம். ஜி. ஆரைத் திட்டினார் - புகழ்கிறார்

இப்படியெல்லாம் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு தலைவர்களைத் திட்டியும், புகழ்ந்தும் பாடியுள்ளார். வாங்கிக் கொண்டதற்கு வக்காலத்துப் பாடியுள்ளார்.

மாபெரும் தலைவரான மாஓ -வைக் கூட 'மா சே துா' என்று 'ராக் அன் ரோல்' - நக்கல் கவிதை பாடினார்.
'சிவப்பு நிலா மாஓ ' - எனப் புகழ்ந்தும் பாடினார்.
செங் கொடியைத் திட்டினார் - பழித்தார்.
பின் சீனப் புரட்சியை, அதன் வளர்ச்சியைப் பாடினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அர்த்தமுள்ள இந்துமதமும், பைபிளும்

'அர்த்தமுள்ள இந்து மதம் என்ன சொல்லுது' என்றவர்-அடுத்து பணத்துக்காகப் 'பைபிளை'ப் பாடினார்.

முதல் நாள் கூறியதையே மறுநாள் மறுத்துக் கூறும் - பாடும், இலட்சியமற்ற, கொள்கையற்ற, உறுதியற்ற தரங்கெட்ட கவிஞர் அவர்.

'தங்கத்திலே குறையிருந்தால் அது தரத்தினில் குறைதான்!'
ஒப்பந்த அடிப்படையில் சினிமாவில் கூட பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் போல், மக்கள் பிரச்சினைகளை எடுத்தாண்டு பாடல்களை எழுதலாமே!
எழுதினாரா கண்ணதாசன்?

தன்னை வளப்படுத்துவதற்காக பல்வேறு தலைவர்களையும் ஏற்றி - இறக்கிப் பாடுவதும், சதைப் பிடுங்கல் கவிதை வடிப்பதும், உழைக்கும் மக்களை, எழுச்சி கொள்ளாமல் தடுத்து மது - மாது புகழ் பாடுவதும், பணத்துக்காக இலக்கியங்களையும் மதக் கோட்பாடுகளையும் காப்பியடித்து எழுதுவதும் நிச்சயம் குற்றமே!
எனவே அவர் தண்டிக்கப்பட வேண்டியவரே'.
இப்படி வாதாடினார் இளங்கோவன்.

'கண்ணதாசன் குற்றவாளி 'அல்லர் என்று திரு. கோவை நந்தன் வாதாடுகையில் குறிப்பிட்டதாவது:-

## அருட்கவிஞர்

'கண்ணதாசனை இலங்கையில் குற்றவாளியாக்கி விசாரிக்க முடியாது.

அவரது பாடல்கள் இன்றைய தமிழ் மக்கள் படிக்கத்தக்கவை. பெருமைப்படத் தக்கவை.
அவர் ஓர் அருட்கவிஞர் - அரசவைக் கவிஞர்.
மக்கள் விரும்புகின்ற, ரசிக்கின்ற பாடல்களை அவர் தருகின்றார். அது அவர் கடமை.

காலத்திற்கு ஏற்ப நிலைமைகளுக்கு ஏற்ப அவர் பல்வேறு கவிதைகளைத் தருகின்றார். எம். ஜி. ஆரே அவரது உதவியை நாடியுள்ளார். நிலைமைகளைக் கவனத்தில் கொண்டே கவிதை படைக்க வேண்டும்.

## கூட்டணியும் கண்ணதாசனும்

ஈழத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் சமஷ்டி, பிரதேச சபை, மாவட்டசபை, ஆறு அம்சக் கோரிக்கை, தமிழ் ஈழம் என்றெல்லாம் கேட்டுவிட்டு இன்று நிலைமைக்கேற்ப, சந்தர்ப்பம் - சூழ்நிலைமைக்கேற்ப, வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ள மாவட்ட அபிவிருத்திச் சபையை வரவேற்கவில்லையா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டணியினரைப் போலவே கண்ணதாசனும் தனது கொள்கைகளை மாற்றிவிடாமல், சந்தர்ப்பம் - சூழ்நிலைகளை மனதில் வைத்தே பல்வேறு தலைவர்களையும் ஏற்றிப் போற்றினார் - வசையும் பாடினார். திட்டித் தீர்க்கவும் செய்தார்.

அவையெல்லாம் அவரது வளர்ச்சி நிலையையும், அனுபவத்தையும், ஆற்றலையுமே குறிக்கும்.

அவரது சினிமாப் பாடல்கள் தரங்கெட்டவை அல்ல.
பரந்த செல்வாக்குள்ள, நாம் பெருமைப்படத்தக்க ஒரு தமிழ்க் கவியரசை குற்றவாளியாக்கக் கூடாது.'
இப்படி அவர் வாதாடினார்.

'நீதிபதி' திரு. ராஜன் தமது தீர்ப்பில் பின்வருமாறு குறிப்பிட்டார்:-

## நீதிபதி எச்சரிக்கை

'பல்வேறு தலைவர்கள் - தனிநபர்கள்
புகழ்பாடுங் கவிதைகளையும்,
பாலுணர்வுக் கவிதைகளையும்,
தரமற்ற, ஆபாச சினிமாப் பாடல்களையும்,
சந்தர்ப்பத்திற்கேற்பத் திட்டித் தீர்க்கும் -
ஏற்றிப் போற்றும் பாடல்களையும்
முத்தையா என்ற இயற் பெயர் கொண்ட கண்ணதாசன் என்பவர் பாடியுள்ளார் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

மதுவிலக்கு அமுலிலுள்ள இடத்தில் மதுவெறியில் பாடுவது -
மதுவைப் பற்றிப் பாடுவது குற்றம் தான்!
இனிமேல், அரசவைக் கவிஞர் என்ற அந்தஸ்திலுள்ள அவர் இப்படியான பாடல்களை எழுதக் கூடாதென கடுமையாக எச்சரிக்கை செய்து, இலங்கைத் தமிழர்களுக்காகக் குரல் எழுப்பிக் கவி பாடியமையை மட்டும் கவனத்தில் கொண்டு அவரை விடுதலை செய்கிறேன்.
இப்படி 'நீதிபதி ' ராஜன் கூறினார்.

வழக்கு நடைபெற்றபோது 'சட்டத்தரணிகளின்' குறுக்கீடுகளும், பதில்களும் ரசிக்கத்தக்கனவாக விருந்தன.

வழக்காடு மன்றம் நடைபெறுவதற்கு முன்பதாக 'ஏங்குகின்ற மூச்செல்லாம் எவர் மூச்சு' என்ற தலைப்பில் சுவையான கவியரங்கொன்றும் இவ்விழாவில் நடைபெற்றது.

கவிஞர் தேவி பரமலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கவியரங்கில், கவிஞர்கள் வி. ரி. இளங்கோவன், வ. ஐ. ச. ஜெயபாலன், சசி தமிழினி ஆகியோர் பங்கு பற்றினர்.

- ( ' தினபதி ' - 24 - 10 - 1980 )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி... ....

- ☐ தினபதி (கொழும்பு)
- ☐ திரு. அ. குமரன்
- ☐ திரு. த. முத்துக்குமாரசாமி
- ☐ திரு. கோவை நந்தன்
- ☐ திரு. ராஜன் (நாச்சிமார் கோவிலடி ராஜன்)
- ☐ திரு. நெல்லை நடேஸ் (நடேசன்)

## வாங்கிப் படியுங்கள்!

### 'சி. டி. சி.' வெளியீடுகள்

*1. பரிசு*
*சிறுவர் மஞ்சரி*
*ஆசிரியர்: பத்மா இளங்கோவன்*

*2. சங்கப்பலகை*
*கவி மஞ்சரி*
*ஆசிரியர்: மாகவி வீரவாகர்*

*3. பாப்பா பாடல்கள்*
*பத்மா இளங்கோவன்*

*4. கரும்பனைகள்*
*வி. ரி. இளங்கோவன் கவிதைகள்*
*ஒலித்தட்டு (சி. டி.)*

*5. சிகரம்*
*வி. ரி. இளங்கோவன் கவிதைகள்*

*6. கரும்பனைகள்*
*வி. ரி. இளங்கோவன் கவிதைகள்*

*7. என் கதை*
*கே. டானியல்*

*8. இது ஒரு வாக்குமூலம்*
*வி. ரி. இளங்கோவன் கவிதைகள்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. மானவீரன் [illegible]
நாவேந்தன்

10. நான் ஒரு பிச்சைக்காரன்
நாவேந்தன்

11. நாவேந்தன் நினைவலைகள்

12. மதுவேனா மரியாள்
(குறுங்காவியம்)
நாவேந்தன்

13. நல்ல மனிதத்தின் நாமம் டானியல்
(அஞ்சலிப் பதிவுகள்)
தொகுப்பு - வி. ரி. இளங்கோவன்

14. கம்யூனிஸ இயக்க வளர்ச்சியில்
தமிழ்ப் பெண்கள்
வி. சின்னத்தம்பி

15. மழலைப் பாடல்கள்
பத்மா இளங்கோவன்

16 பிள்ளைப் பாடல்கள்
பத்மா இளங்கோவன்

17. மண் மறவா மனிதர்கள்
வி. ரி. இளங்கோவன்

18. மண் மறவாத் தொண்டர் திரு
தொகுப்பு - வி. ரி. இளங்கோவன்



## விரைவில் வெளிவரவுள்ள நாவேந்தன் நூல்கள்

புதிய பதிப்பு

☐ வாழ்வு
(சிறுகதைத் தொகுதி - சாகித்திய மண்டலப் பரிசு - 1964)

☐ தெய்வமகன்
(சிறுகதைத் தொகுதி)

☐ சிறீ அளித்த சிறை
(ஈழத் தமிழர் சட்டமறுப்புப் போராட்ட முதல் நூல்)

☐ சிலப்பதிகாரச் செந்நெறி
(ஒரு சொற்பொழிவு)

☐ நாவேந்தன் கட்டுரைகள்

☐ நாவேந்தன் கவிதைகள்

தொடர்புகளுக்கு:

'சி. டி. சி.'
தொலைபேசி இல. : 05 61 55 00 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org